**යටිතල පහසුකම් සහ උපාය මාර්ගික සංවර්ධනය පිළිබඳ ආංශික අධීක්ෂණ කාරක සභාව**

වෙත යොමු කරන ලද

ජාතික ගමනාගමන කොමිෂන් සභා (සංශෝධන) පනත් කෙටුම්පත

සම්බන්ධයෙන්

**යටිතල පහසුකම් සහ උපාය මාර්ගික සංවර්ධනය පිළිබඳ ආංශික අධීක්ෂණ කාරක සභාවේ වාර්තාව**

පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කරන ලද්දේ

**යටිතල පහසුකම් සහ උපාය මාර්ගික සංවර්ධනය පිළිබඳ ආංශික අධීක්ෂණ කාරක සභාවේ සභාපති**

ගරු අජිත් **පී.** පෙරේරා මහතා, පා.ම. විසිනි

**2025** ජූනි මස **04** වැනි බදාදා

---

**உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மூலோபாய அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு**

**ஆற்றுப்படுத்தப்பட்ட**

**தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (திருத்தச்) சட்டமூலம்**

**மீதான**

**உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மூலோபாய அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின்**

**அறிக்கை**

**உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மூலோபாய அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின்**

**தவிசாளர்**

**கௌரவ அஜித் பீ. பெரேரா, பா.உ. அவர்களால்**

**பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.**

**2025 யூன் 04, புதன்கிழமை.**

---

**Report of the**

**Sectoral Oversight Committee on Infrastructure and Strategic Development**

**on**

**National Transport Commission (Amendment) Bill**

**referred to**

**Sectoral Oversight Committee on Infrastructure and Strategic Development**

**Presented to Parliament by**

**Hon. Ajith P. Perera, M.P.**

**Chair of the**

**Sectoral Oversight Committee on Infrastructure and Strategic Development**

**Wednesday, 04 June 2025**

**குழுவின் அறிக்கை**

2025 மே மாதம் 27 ஆம் திகதி பாராளுமன்றத்தில் கூடிய, உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மூலோபாய அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவால் கீழ்க்கண்ட சட்டமூலம் பரிசீலனை செய்யப்பட்டது:

- **தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (திருத்தச்) சட்டமூலம்**

(2025 மே மாதம் 08 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மூலோபாய அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.)

**கலந்துகொண்ட குழுவின் அங்கத்தவ உறுப்பினர்கள்:**

கௌரவ அஜித் பீ. பெரேரா, பா.உ. (தவிசாளர்)

கௌரவ நலின் பண்டார ஜயமஹ, பா.உ.

கௌரவ மஞ்சுள சுரவீர ஆரச்சி, பா.உ.

கௌரவ தனுஷ்க ரங்கநாத், பா.உ.

கௌரவ அசித நிரோஷன எகோட விதான, பா.உ.

கௌரவ ஜகத் விதான, பா.உ.

கௌரவ சாந்த பத்ம குமார சுபசிங்க, பா.உ.

**குழுவின் செயலாளர்**

திருமதி சூலா ஹேரத், உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்)

**கலந்துகொண்ட உத்தியோகத்தர்கள்**

**போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு**

திரு.ஈ.எம்.எஸ்.பீ. ஜயசுந்தர, மேலதிகச் செயலாளர் (நிர்வாகம்)

திருமதி.என்.டீ.என்.வீ. ஜயவர்தன, சிரேஷ்ட உதவிச் செயலாளர் (அபிவிருத்தி)

திருமதி.எம்.ஏ. பிரியந்தி குணசேகர, சட்ட உத்தியோகத்தர்

**தேசிய போக்குவரத்து ஆணைக்குழு**

பொறியியலாளர் திரு.பீ.ஏ. சந்திரபால, தலைவர்

திரு.பீ.எம். இப்திகார், பணிப்பாளர் (தர உத்தரவாதம்)

திருமதி.கே.ஏ.சீ. கருணாரத்ன, பணிப்பாளர் (திட்டமிடல்)

திருமதி.எஸ்.டீ. அத்துகோரல, பணிப்பாளர் (தொழிற்பாடு)

திருமதி.எச்.எம்.கே. மதுவந்தி, உதவிப் பணிப்பாளர் (சட்டம்)

திரு.எம்.என். சந்திரரத்ன, சட்ட உத்தியோகத்தர்

**சட்டமா அதிபர் திணைக்களம்**

திரு.நிர்மலன் விக்னேஸ்வரன், பிரதி சொலிசிட்டர் ஜெனரல்

**சட்ட வரைஞர் திணைக்களம்**

திருமதி.எஸ். எஸ். எம். டி. ஏ. வீரக்கோன், பிரதி சட்ட வரைஞர்

திருமதி.எச்.எஸ்.ஏ. குணசேகர, உதவி சட்ட வரைஞர்

**அறிமுகம்**

இந்த சட்டத்தின் முக்கிய நோக்கம், 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தில் சில புதிய ஏற்பாடுகளைச் சேர்ப்பதும், தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (NTC) நீண்டகாலமாக

எதிர்கொண்டு வந்த பல நடைமுறைச் சிக்கல்களுக்குத் தீர்வுகளை வழங்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்வதுமாகும்.

குறிப்பாக, இந்த திருத்தத்தின் மூலம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு வீதிப் பயணிகள் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதற்கான புதிய அதிகாரங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. ஆரம்ப சட்டம் பயணிகள் போக்குவரத்தை மட்டுமே உள்ளடக்கியிருந்தது. புதிய சட்டமூலத்தின் மூலம் பாடசாலை வேன்கள், முச்சக்கர வண்டிகள் மற்றும் அலுவலக போக்குவரத்து முறைகளையும் ஒழுங்குபடுத்துவதற்கான அதிகாரங்கள் வழங்கப்படுகின்றன. மேலும், இந்த சட்டமூலம் சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு வேறு எந்தவொரு போக்குவரத்து ஊடகத்தையும் ஒழுங்குபடுத்துவதற்கான அதிகாரத்தையும் உள்ளடக்கியுள்ளது.

இந்த திருத்தச் சட்டமூலத்தின் மூலம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள சில கடமைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

- தேசிய மட்டத்தில் வீதிப் பயணிகள் போக்குவரத்து வழிகாட்டல்களைத் தயாரித்தல்.
- போக்குவரத்து கட்டணங்களை கணக்கிடுவதற்கான ஒரு சூத்திரத்தை உருவாக்கி, அவ்வப்போது திருத்துதல்.
- நவீன தொழில்நுட்ப அமைப்புகளின் பயன்பாட்டை மேம்படுத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்.
- போக்குவரத்து சேவை தொடர்பான உட்கட்டமைப்பு வசதிகளுக்கு இடமளித்தல்.
- போக்குவரத்து சேவைகளுக்கான தேசிய தகவல் முறைமையைப் பேணுதல்.
- சேவை வழங்குநர்களால் வழங்கப்படும் சேவைகளை மேற்பார்வையிடுதல்.
- அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்களுக்கு கட்டளைகளை பிறப்பித்தல்.
- ஆணைக்குழுவின் நடவடிக்கைகளுக்கு உதவுவதற்காக உப குழுக்களை நியமித்தல்.

<u>குழுவின் அவதானிப்புகள்</u>

1. மாகாணங்களுக்குள் போக்குவரத்து ஆனது வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினாலும் (RPTA), மாகாணங்களுக்கிடையேயான பேருந்துகள் மற்றும் பிற போக்குவரத்து ஊடகங்கள் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினாலும் (NTC) ஒழுங்குபடுத்தப்படுகின்றன.
2. பல்வேறு பயணிகள் சேவை வழங்குநர்களுக்கிடையே (NTC, SLTB, மாகாண பேருந்துகள்) ஏற்படும் மோதல்கள் மற்றும் அவற்றைச் சமரசம் செய்வதில் NTC இன் பங்கு, மற்றும் அத்தகைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஏற்கனவே ஒரு பொறிமுறை இருப்பதோடு, இந்தச் சட்டத்தின் மூலம் NTCக்கு அந்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.
3. ஒருங்கிணைந்த கால அட்டவணைகள் இல்லாததால், நாட்டின் ஒட்டுமொத்த பயணிகள் போக்குவரத்து குழப்பமான நிலையில் உள்ளது.
4. வாகனங்களை நெறிப்படுத்துவதற்கான விண்ணப்பதாரரின் தொடர்ச்சியான நிதி சாத்தியத்தை மதிப்பீடு செய்வதற்காக, மாகாணங்களுக்கிடையேயான பேருந்து அனுமதிப்பத்திரங்களை வழங்கும் போது, நெறிப்படுத்துநருக்கு நிதியியல் ரீதியாக தொழில்முயற்சியை தொடர்ந்து நடத்த முடியுமா என்பதை மதிப்பிடுவதும், அதற்காக வருமான வரி அறிக்கைகள் மற்றும் வங்கிக் கூற்றுக்கள் போன்ற ஆவணங்களைச் சரிபார்ப்பதும் இடம்பெறுகிறது.
5. சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கான EPF/ETF செலுத்தல்களையும் ஒழுக்கத்தையும் மேம்படுத்தவும் EPF/ETF கொடுப்பனவுகளை உறுதிப்படுத்தவும் NTC/RPTA ஊடாக சாரதிகள்/நடத்துநர்களைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் பயிற்சியளிக்கப்படுதல் என்பவற்றை ஒழுங்குபடுத்துதல் வேண்டும்.
6. 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க ஆரம்ப சட்டத்தின் 44 ஆம் பிரிவின் கீழ் அமைச்சருக்கு விதிகளை ஆக்குவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள போதிலும், இதுவரை எந்த விதியும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை மற்றும் புதிய சட்டத்தில் தண்டனைகள் கணிசமாக அதிகரிக்கப்பட்டுள்ளதால், விதிகளை உருவாக்கும் பொறுப்பு மிகவும் முக்கியமானதாக மாறியுள்ளது.
7. அனுமதிப்பத்திரமின்றி பேருந்து செலுத்தும் பாரதூரமான குற்றத்திற்காக குறைந்தபட்சம் ரூ. 250,000/- மற்றும் அதிகபட்சம் ரூ. 500,000/- அபராதம் அல்லது ஐந்து ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன், ஏனைய குற்றங்களுக்கான தண்டனைகள் விதிகளின் மூலம் விதிக்கப்படும்.

(எனினும், சிறிய குற்றங்களுக்காக மேற்கண்ட அபராதங்கள் நியாயமற்றவை என்பதால், குற்றங்களை வகைப்படுத்தி அதற்கேற்ப தண்டனைகள் விதிக்கப்பட வேண்டும் என்பது குழுவின் கருத்தாக இருந்தது).

8. வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் பரிசோதகர்களால் NTC அனுமதிப்பத்திரம் பெற்ற பேருந்துகளைப் பரிசோதிக்க முடியாமையும், இந்தப் பரிசோதனைகள் ஒருங்கிணைக்கப்படாமையால் NTC பேருந்துகள் விதிகளை மீறுவதாகவும், எனவே NTC மற்றும் RPTA பேருந்துகள் இரண்டிற்கும் பொருந்தும் வகையில் ஒரு ஒருங்கிணைந்த பரிசோதனைக் குழுவை நியமிப்பது பொருத்தமானது.
9. தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 2005 ஆம் ஆண்டு திருத்தத்திலிருந்து, ஒருங்கிணைந்த கால அட்டவணைகளை நடைமுறைப்படுத்துவதற்காக அதிவேக நெடுஞ்சாலைகளிலும் பதுளை-கொழும்பு வீதியிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், மாகாணங்களுக்கிடையேயான வீதிகளுக்கான ஒருங்கிணைந்த கால அட்டவணைகள் இருந்தபோதிலும், செயற்பாட்டு சிக்கல்கள் மற்றும் பின்தொடர்தல் இல்லாததால் அவை தோல்வியுற்றன என்றும், GPS தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கொரிடோ மீது கவனம் செலுத்தி புதிய முயற்சி (புத்தளம் கொரிடோவில் ஆரம்பித்து) தற்போது நடைபெற்று வருகிறது.

10. 2009 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் அடிப்படையில் அமைந்த 60:40 வீதி ஓட்ட நேர அட்டவணை விகிதம் (இலங்கை போக்குவரத்துச் சபைக்கு (SLTB) 40%, தனியார் பேருந்துகளுக்கு 60%) இலங்கை போக்குவரத்துச் சபையில் (SLTB) போதுமான பேருந்துகள் இல்லாததால் நடைமுறைக்கு சாத்தியமற்றது.
11. பயணிகளின் வசதி மற்றும் பாதுகாப்பு இந்தப் புதிய சட்டத்தின் முக்கிய கருப்பொருள் என்பதோடு, இது தொடர்பாக NTC க்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் தற்போது பாதுகாப்பு தரநிலைகள் உருவாக்கப்பட்டு வருகின்றது.

<u>குழுவின் தீர்மானங்கள்</u>

பரிசீலனை செய்ததன் பின்னர், குழுவானது தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (திருத்தச்) சட்டமூலம் தொடர்பில் இணக்கம் தெரிவித்ததுடன் அது தொடர்பாக தயாரிக்கப்பட்ட குழுவின் இவ்வறிக்கை, குழுவின் தவிசாளர், பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சட்டத்தரணி அஜித் பீ.பெரேரா அவர்களினால் 2025 யூன் மாதம் 04 ஆம் திகதி புதன்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனத் தீர்மானித்தது.